

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 245 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 03 – வியாழக்கிழமை 16 ஏப்ரல் 2026 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 245 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 03 - Thursday 16 April 2026 - Madurai 16 Pages ₹ 5.00


## தொகுதி மறுவரையறை: மாபெரும் வரலாற்று அநீதி!

# தமிழ்நாடு முழுவதும் இன்று கருப்புக் கொடிப் போராட்டம்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 16 -**

**தொகுதி மறுவரையறைக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் இன்று (16.4.2026) கருப்புக் கொடிப் போராட்டம் நடைபெறுகிறதென்று கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அறிவித்துள்ளார்.**

“மக்கள் தொகையைக் கட்டுப் படுத்துங்கள்; அளவாகக் குழந்தை களைப் பெற்றுக் கொள்ளுங்கள், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப் பிடியுங்கள்” என ஒன்றிய அரசு சொன்னதையெல்லாம் நாங்கள் கேட்டோம்.

சொன்னதை ஒழுங்காகச் செய்ததற்காகவே எங்களுக்குத் தண்டனை தருவீர்களா?

“தென்மாநிலங்கள் பாதிப்படை யாது” என நாடாளுமன்றத்தில் வைத்துப் பிரதமர் அவர்கள் உத் தரவாதம் தர வேண்டும் என்று கேட்டோம். பதில் இல்லை! இதுக் காகப் பல்வேறு கட்சி எம்.பி.க்கள் பிரதமரை நேரில் சந்தித்து முறை யிட நேரம் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை!

இப்படி, நாம் சொன்ன எதை யும் அவர்கள் காதில் வாங்காமல்,



தி.மு.க. மட்டுமல்ல; எந்தக் கட்சி யோடும் எந்த மாநிலத்தோடும் – எந்த ஆலோசனையும் நடத்தாமல், அவர்கள் இஷ்டத்துக்கு செய்யப் பார்க்கிறார்கள்.

இப்படி அவசர அவசரமாக 'Delimitation' செய்ய நினைப்பது, பா.ஜ.க. அரசின் அப்பட்டமான ஜனநாயக விரோதச் செயல்! இன்னும் சொன்னால், மாநில உரிமைகளைப் படுகொலை செய்திருக்கிறார்கள்.

இந்த 'Delimitation'ஐ எப்படி செய்ய போகிறார்கள் என்று தெரிய வில்லை. அந்தச் சட்டத் திருத்தம் என்ன என்பது பற்றி, இதுவரை எந்த விளக்கத்தையும் கொடுக் காமல் இருக்கிறார்கள்.

இவர்கள் இப்படி மறைத்து மறைத்துச் செய்கிறார்கள் என் றால், கண்டிப்பாக ஏதோ பெரிய ஆபத்து இருக்கிறது என்று, அனை வருக்குமே அந்தச் சந்தேகம் வலுவடைகிறது. தென்மாநில மக்கள் பெரும் அச்சத்தில் இருக் கிறார்கள்.

நான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக் கும் பிரதமர் மோடி அவர்களுக் கும், இந்த நேரத்தில் முக்கியமாக ஒன்று சொல்லிக் கொள்கிறேன்.

நடக்க இருக்கும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில், எங்கள் எம்.பி.க் கள் கலந்து கொள்வார்கள். தமிழ் நாட்டை பாதிப்பது போன்றோ, வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, ஏதாவது நடந்தால், தமிழ்நாட்டில் இருக்கும் நாங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட் டோம். தமிழ்நாடே ஸ்தம்பிக்கும்! தமிழ்நாடு தனது எதிர்ப்பைக் கடுமையாகக் காட்டும். ஒவ்வொரு குடும்பமும் தெருவில் வந்து உட்காருவோம். தமிழ்நாடு முதலமைச்சராக இருக்கும் என்னு டைய தலைமையிலேயே மிகப் பெரிய போராட்டம் நடத்துவோம் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் தமது சமூக வலை தளப் பதிவில் வெளியிட்டிருந்தார்.

**இந்நிலையில், இதுகுறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டி ருப்பதாவது:-**

**உயரட்டும் கருப்புக்கொடி!**
**தமிழ்நாடு போராடும்!**
**தமிழ்நாடு வெல்லும்!**

**இந்தியாவின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட குற்றத்துக்காக தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்குத் தண்டனையா?**

**ஒன்றிய பா.ஜ.க. அரசு நாளை நாடாளுமன்றத்தில் கொண்டுவர வுள்ள #Delimitation சட்டத்திருத்தம் தமிழ்நாட்டுக்கும், தென்மாநிலங் களுக்கும் இழைக்கப்படும் “மாபெரும் வரலாற்று அநீதி”!**

**நெருப்போடு விளையாடும் பா.ஜ.க.!**

**விந்திய மலைக்குத் தெற்கே உள்ள தென்னிந்தியர் ஒவ்வொரு வரும் கொதித்துப் போயிருக்கி றோம். நெருப்போடு விளையாடு கிறது பா.ஜ.க.!**

**தொகுதி மறுவரையறைக்கு எதிராகத் தமிழ்நாடு முழுவதும் வீடுகளிலும், பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் இன்று (16.4.2026) நடக்கும்.**

**சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கை!**

**தமிழ்நாட்டின் குரலை மதித்து ஒன்றிய அரசு பின்வாங்கவில்லை என்றால், அதற்கான விளைவு களை நீங்கள் சந்திக்க வேண்டி இருக்கும். இதற்காக, மிகப் பெரிய விலையை நீங்கள் கொடுக்க வேண்டி இருக்கும்!**

**தி.மு.க. தலைவராக, அனைத்துக் கும் மேல் சுயமரியாதையுள்ள தமிழனாக மீண்டும் எச்சரிக்கிறேன்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

## ஒவ்வொரு வீட்டிலும் பொது இடங்களிலும்

# கருப்புச் சட்டத்திற்கு எதிராகக் கருப்புக் கொடி ஏற்றுவீர்!

## பொதுமக்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, ஏப். 16 -**

**“ஒவ்வொரு வீட்டிலும் பொது இடங்களிலும் கருப்புச் சட்டத்திற்கு எதிராகக் கருப்புக் கொடி ஏற்றுவோம்” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், தொகுதி மறுவரை யறைக்கு எதிரான கருப்புக்கொடிப் போராட்டத் துக்கு அழைப்பு விடுத்து நேற்று (15.4.2026) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவின் விவரம் வருமாறு: -

தமிழ்நாட்டின் வாசல் வரை வந்துவிட்ட பேராபத்தைப் பற்றி நேற்று நான் வீடியோவில் சொல்லி இருந்தேன்.

Delimitation என்ற பெயரில், தனது லிமிட் டைத் தாண்டி, பா.ஜ.க. அரசு, தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்கிறது!

வடமாநிலங்களுக்கு அரசியல் வலிமையை மேலும் வாரி வழங்குவது போன்றோ, தென் மாநிலங்கள் அரசியல் வலிமையை இழப்பது போன்றோ நடந்தால், “தமிழ்நாடு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது, ஒவ்வொரு குடும்ப மும் தெருவுக்கு வந்து போராடும்” என்று சொல்லி இருந்தேன். யார் நல்லது சொன்னா லும் கேட்காத ஒன்றிய பா.ஜ.க. அரசு, இதையும் கேட்கவில்லை.

**தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கப் பார்க்கிறார்கள்!**

சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நாடாளு மன்றத்தில் தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கப் பார்க் கிறார்கள்! நாளைக்கு கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்தால், வட மாநிலங்களுக்கும் - தென் மாநிலங்களுக்குமான உறுப்பினர்கள் எண்ணிக்கை வேறுபடும்.

சும்மா, பெயரளவுக்கு தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு தொகுதியை அதிகரிக்கி றோம் என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கு சாதக மான வட மாநிலங்களுக்கு, மிக மிக கூடுதலாக தொகுதிகளை அதிகரித்து, நம்முடைய தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவமே தேவையில்லை என்ற நிலைமையை கொண்டு வரப் போகிறார்கள்!

இதைத்தான் எங்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் அநீதி என சொல்கிறோம்.

**தென் மாநிலங்களுக்குத் தண்டனையா?**

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதற் காகத் தென் மாநிலங்களுக்கு தண்டனையா இது? தேச நலனுக்காக - தேச வளர்ச்சிக்காக நாங்கள் துணை நின்றால், எங்களின் அரசியல் உரிமையையே பறிப்பீர்களா? இதை விடக் கொடுமை என்ன இருக்க முடியும்? பிரதமர் மோடி அவர்களே! தமிழர்களையும் தென் மாநில மக்களையும் இரண்டாம் தர குடிமக்களாக்கப் பார்க்கிறீர்கள்!

டெல்லி பா.ஜ.க.வுக்கு தமிழர்கள் யார் என்று காட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. தமிழ் நாட்டின் குரல் வளையை நெரிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக, தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

நாளைக்கு நாடாளுமன்றத்தில் அவர்கள் கொண்டு வரப் போகும் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையில், தமிழ்நாட்டில் அனைவரும் நம்முடைய வீட்டில் கருப்புக் கொடியை ஏற்றுவோம். கருப்புச் சட்டத்தை எதிர்த்து நம் எதிர்ப்பின் அடையாளமாக, கருப்புக் கொடியை ஏற்றுவோம். இந்தியாவை இருண்ட காலத்துக்கு அழைத்துக் கொண்டு எதேச்சாதிகார பா.ஜ.க. அரசுக்கு எதிராக கருப்புக் கொடி ஏற்றுவோம்.

இது தமிழ்நாட்டுக்கும் – டெல்லிக்குமான தேர்தல் என நான் சொன்னதை, பா.ஜ.க. தொடர்ந்து நிரூ பிக்கிறது! நான் சொன்னதன் உண்மையான அர்த்தத்தை பா.ஜ.க.வே உணர்த்திவிட்டது.

**சதியை எப்படி சட்டமாக ஏற்க முடியும்?**

அவர்களுக்கு தமிழ்நாடு முன்னேறிவிடக் கூடாது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் குரல்கூட நாடாளுமன்றத்தில் ஒலிக்கக் கூடாது. அதற்கான சதித் திட்டத்தைச் சட்டமாகவே கொண்டு வருகி றார்கள். சதியை எப்படி சட்டமாக ஏற்க முடியும்?

கருப்புச் சட்டத்துக்கு எதிராகக் கருப்புக் கொடி ஏற்றுவோம். ஒவ்வொரு வீட்டிலும், பொது இடங் களிலும் ஏற்றுவோம்! மீண்டும் எச்சரிக்கை செய் கிறேன்! மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி களை முடிவு செய்யக் கூடாது! கருப்புச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது! 8 கோடித் தமிழர்களின் ஒற்றைக் கோரிக்கை இது.

அரசியல் எல்லைகளைக் கடந்து, தமிழ்நாட் டின் உரிமையைக் காக்க தமிழ்நாடே ஓங்கி ஒலிக்கட்டும்!

**தமிழ்நாடு போராடும்!**
**தமிழ்நாடு வெல்லும்!**
**வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.